முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1424

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.08.2023**, புதன்கிழமை

1. பிரணவ சக்திகொண்ட அரங்கனே
பிரணவ சித்திமிகு ராஜனே
சரவணச்சுடரேற்றி என் பலமாகவே
சகலருக்கும் சற்குருவாய் அருளுகின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 06 ம் நாள், 23.08.2023 புதன்கிழமை)
ஆசி தந்து உன் கரம்பட உலகோர்க்கு
ஆற்றல்பட ஆறுமுகன் யான் இயங்கி வருகின்றேன்
3. வருகவே பிரணவக்குடில் நோக்கி
வரும் மக்களுக்கெல்லாம் ஞானம்
தருகின்றேன் இனி பிறவாத சக்திநிலை வண்ணம்
தவமோடு தர்மமும் கூடிய உன் கரம்பட
4. கரம்பட உலகோர்க்கு தீட்சையாக
உன்கரம்பட உலகோர்க்கு ஆசியாக
நன்மைதனை வேலவன் யான் உலகமெங்கும்
ஞானமாக தானமாக தர்மமாக தந்துவருகின்றேன்
5. வருகவே அரங்கா என உனை எண்ணும்
அன்பர்கள் அனைத்து பேருக்கும்
வந்தேன் என ஆறுமுகன் யான்
வையகத்தில் சடுதி இறங்கி அருள்புரிகின்றேன்
6. அருளாக அறமாக அரங்கன் நீ
அற்புதத்தை ஆன்மீகஞான நல்லுலகம்
ஏற்புகொண்டு உலகோர் உன்வழி வந்து
எங்கும் ஆன்மீக அரசியல் களமாக

7. களமிறங்கி உலகோர் ஞான ஆட்சி
கண்டுதேறும் காலம் சடுதியப்பா
பலமான தொண்டர்படை உன்பாலிருக்க
பழுதில்லை இந்த மாற்றம் சடுதி காணும்

8. காணவே காலத்தை எண்ணி எண்ணி
கலியுகத்தில் உன் தொண்டர்கள் காத்து இருக்க
கோலமதாய் வேலவன் யான் இந்த அற்புதத்தை
குரு அரங்கன் உன் கரம்படவே சக்தியாக்கி உலகோர்க்கு ஆசி தந்து மாற்றுவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–